2017 ஜூன் 20]

கல்லூரியை ஏற்படுத்தினால், மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அப்படிப்பட்ட கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலச் சூழ்நிலைகளுக்கேற்ப முன்பிருந்த பாடப் பிரிவுகளையும் சேர்த்து, கடந்த 6 ஆண்டுகளில் 961 புதிய பாடப் பிரிவுகளையும் தோற்றுவித்து, அதன்மூலமாக பல்வேறு வகைகளில் மாணவர்களுடைய வளர்ச்சி விகிதத்தை உயர்த்துகின்ற வகையிலும், வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற வகையிலும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நேற்றையதினம், பேரவை விதி 110-ன்கீழ், 268 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படுகிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதன்பேரில் அந்தப் பாடப் பிரிவுகளையும் கல்லூரிகளில் தோற்றுவிப்பதற்கும், அதன்மூலமாக தொழில் வளத்தைப் பெருக்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டி அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

ஜவுளிப் பூங்கா

***12098—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், அப்பகுதியிலுள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், நடைமுறையிலுள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ், அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் மற்றும் அருகில் இருக்கக்கூடிய புளியங்குடி பகுதிகளில் முன்பு கைத்தறி நெசவாளர்கள் அதிகளவில் இருந்தார்கள். அந்தப் பகுதிகளில் லுங்கி போன்றவற்றை தயாரிக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து வந்தது. அந்தத் தொழில் முழுமையாக நலிவடைந்து, மக்கள் அந்தத் தொழிலையே விட்டுப் போக வேண்டிய ஒரு சூழ்நிலையும், பல்வேறு சூழ்நிலைகளினால் அந்தப் பகுதிகளில் வேலைவாய்ப்பு இல்லாமல் வெளிநாடுகளுக்கு கூலி வேலைக்குச் செல்லும் ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நன்கு ஆராய்ந்து, அந்தப் பகுதியிலே, குறிப்பாக, கடையநல்லூரிலே கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைப்பதற்குண்டான அனைத்து*

2017 ஜூன் 20]

ஏற்பாடுகளையும் செய்து தரவேண்டுமென்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் 61 ஜவுளிப் பூங்காக்கள் இருக்கின்றன. அதில், தமிழ்நாட்டில் 13 ஜவுளிப் பூங்காக்கள் இயங்கி வருகின்றன. ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலம் வேண்டும். அடுத்து, 60 முதல் 65 கோடி ரூபாய் வரை திட்ட மதிப்பீடு தேவைப்படுகிறது. இந்தத் தொகையில் 40 சதவிகிதம் அல்லது 40 கோடி ரூபாயை மத்திய அரசு மானியமாகத் தருகிறது. முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 9 சதவிகிதம் அல்லது 9 கோடி ரூபாயை, மாநில அரசு வழங்கும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 51 சதவிகித முதலீட்டுத் தொகையை தொழில் முதலீட்டாளர்கள் கடனாகப் பெற்றோ அல்லது அவர்களின் சொந்த நிதியிலிருந்தோ கொடுத்தால்தான், அங்கே ஜவுளிப் பூங்காவை அமைக்கமுடியும்.*

முற்பகல் 10-50

அந்த வகையில், தொழில்முனைவோர்கள் முன்வருவார்கள் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையோடு அது செய்துதரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் இவ்வளவு பெரிய தொகையை வைத்து ஒரு பூங்கா அமைப்பதில் சாத்தியம் இல்லாத நிலை இருப்பதை உணர்ந்து, ரூ.2 கோடியே 50 இலட்சத்தை மாநில அரசு மானியமாகத் தரும் என்றும், மீதித் தொகையை தொழில்முனைவோர்கள் முதலீடு செய்வதற்கு முன்வருவார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பூங்கா அமைப்பதற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள ஆணையிடும் என்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி. என்னுடைய தொகுதியில் தொழிற்சாலைகளே இல்லை. இங்கு படித்த பட்டதாரிகள் உரிய வேலை இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, நவீன தொழில்நுட்பத்தோடுகூடிய இந்தத் தொழில் பூங்காவை, நீங்கள் ஏற்கெனவே சொன்னதுபோல, மத்திய அரசின் மானியத்தோடும், மாநில அரசின் நிதிப் பங்களிப்போடும் அமைக்க தொழில்முனைவோர்களின் ஆலோசனைகளைப் பெற்று, நான் உங்களுடைய நேரடி கவனத்திற்கு எடுத்து வருகிறேன். ஒரு வருடமாக சொல்லிக்கொண்டிருக்கிறேன். கடையநல்லூர் தொகுதிக்கு ஏதாவது ஓர் அறிவிப்பு எப்படியாவது வரவேண்டும் என்பதுதான் எனது ஆசை. அதை கண்டிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, செய்துதர வேண்டும் என்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் அடிப்படை பிரச்சினையைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, கைத்தறி என்பது முழுக்க முழுக்க ஒரு குடிசைத் தொழில். தொழிற்சாலையில் செய்யக்கூடிய தொழில் அல்ல. ஏற்றுமதியைப் பெருக்குகின்ற நோக்கத்தோடு உட்கட்டமைப்பு வசதிகளான சாயமிடுதல் போன்ற அனைத்துப் பணிகளையும் ஒரே இடத்தில் அமைத்துக் கொடுப்பதுதான் பூங்கா ஏற்படுத்தப்படுவதன் நோக்கமாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்சாலை வேண்டுமென்று விரும்பினால், தனிக் கேள்வி போட்டு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்மூலம் பதில் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*